செ.வெ.எண்: 78 நாள்: 02.02.2026

# புதுக்கோட்டை மாவட்டம்
# பத்திரிக்கை செய்தி

---

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் எதிர்வரும் 2026 - சட்டமன்ற பொதுத்தேர்தல் முன்னிட்டு வாக்காளர்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்குப்பதிவு செய்தல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் புதுக்கோட்டை, இலுப்பூர், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களில் 21.01.2026 முதல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயல்விளக்க மையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 25.01.2026 முதல் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு வாகனம் வீதம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்கும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயல்விளக்க வாகனம் (EVM Demonstration Van) மூலம் அனைத்து வாக்குச்சாவடி மையங்களையும் உள்ளடக்கிய பகுதிகளில் விழிப்புணர்வு மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் வாக்காளர்களுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்திற்காக ஆறு சட்டமன்றத் தொகுதிக்கு 101 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்கள் உள்ளடக்கிய பகுதிகளில் விழிப்புணர்வு மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டுள்ளது. வாக்காளர்கள் இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தின் மூலம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து நேரடியாக அறிந்து கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai